00558

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 04

**EPU4534**–முன்பிள்ளை மற்றும் ஆரம்ப பிரிவு வயதினரிடையேயான பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகள் (சீராக்கல்)

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- **21.06.2025** நேரம்:மு.ப 09.30 - பி.ப 12.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. "பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகள்" என்ற பதத்தை முன்பள்ளிப் பிள்ளைகளுடன் தொடர்புடையதாக வரையறுத்து, உளச் சீர்குலைவுகளின் கண்டறிதலும், புள்ளி விபரமும் கைந்நூல் 5ம் பதிப்பு (DSM -5) வகைப்பாட்டின் அடிப்படையில் இரண்டு (02) கண்டறியும் பதிப்பு அளவுகோல்களை விபரிக்குக.

2. முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வியிலும் உள்ள பிள்ளைகள் பின்னர் இளமைப்பருவத்தில் சவாலான சூழ்நிலைகளைச் சமாளிப்பதில் எதிர்கொள்ளக்கூடிய இரண்டு (02) தடைகளைப் பெயரிடுக.

3. பியாஜே அறிவாற்றல் விருத்திக் கோட்பாட்டில் பிள்ளைகளின் நிலைகள் நான்கினைப் (04) பட்டியலிடுக. ஒரு கட்டத்தைத் தேர்ந்தெடுத்து அதைப் பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக.

4. பிள்ளைகளின் கல்வி செயல்திறன் அல்லது சமூக நடத்தையை பாதிக்கக்கூடிய இரண்டு (02) அழுத்த வாழ்க்கை (Stress life) நிகழ்வுகளைச் சுருக்கமாக விபரிக்குக.

5. பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகள் உள்ள பிள்ளைகளில் பொதுவாகக் காணப்படும் இரண்டு (02) அறிகுறிகளை பாடசாலை அமைப்பிலிருந்து நிஜ வாழ்க்கை உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக.

6. பொருத்தப்பாட்டு பிரச்சினைகள் காரணமாக விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளில் இருக்கக்கூடிய ஐந்து (05) மனவெழுச்சி அல்லது பண்புகளை பட்டியலிடுக.

7. பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகள் அனுபவிக்கும் பிள்ளைகளை ஆதரிக்க ஆரம்ப வகுப்பறையில் செயற்படுத்தக்கூடிய இரண்டு (02) பயனுள்ள கற்பித்தல் உத்திகளை விபரிக்குக.

8. பிள்ளைப்பருவத்தில் பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகளுக்கு சுற்றுச்சூழல் காரணிகள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதைப் பற்றிக் கலந்துரையாடுக. மூன்று (03) உறுதியான எடுத்துக்காட்டுக்களை வழங்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

00558

பகுதி – II

9. 'வகுப்பறையில் அடிக்கடி ஆக்ரோஸத்தையும் சோகத்தையும் காட்டும் ஒரு மாணவருக்கு நீங்கள் கற்பிப்பதாக கற்பனை செய்து பாருங்கள்.'

i. இத்தகைய நடத்தைப் பிரச்சனைகளுக்கு இரண்டு (02) சாத்தியமான உளவியல் அல்லது சுற்றுச் சூழல் காரணங்களைக் கூறுக.

(05 புள்ளிகள்)

ii. எரிக்சனின் உளவியல் சமூக மேம்பாட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில், "முன்முயற்சி /ஆரம்பித்தல் (Initiative) vs குற்ற உணர்வு (guilt) கட்டத்தில் தீர்க்கப்படாத முரண்பாடுகள் ஆரம்பப் பாடசாலையில் எவ்வாறு பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்பதை விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகள் மாணவர்களுக்கு ஆதரிக்க வகுப்பறையில் உளவியல் சமூகச் சூழலை நிர்வகிக்க ஆசிரியரொருவர் எடுக்கக் கூடிய நான்கு (04) நடவடிக்கைகளைப் பரிந்துரைக்குக.

(08 புள்ளிகள்)

10. i. வகுப்பறை நிர்வாகத்தில் பரஸ்பரம் (Reciprocity) என்ற கருத்தை வரையறுக்குக.

(05 புள்ளிகள்)

ii. பொருத்தப்பாட்டுப் பிரச்சனைகள் கொண்ட பிள்ளைகளைத் திறம்படக் கையாள ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய மூன்று (03) திறன்களை விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. ஆசிரியராக, வகுப்பில் அரிதாகவும் பின்வாங்கியும் பேசும் ஒரு பிள்ளையை நீங்கள் கையாளுகின்றீர்கள். இந்த மாணவரின் பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகளை ஆதரிக்க பந்துராவின் சமூக கற்றல் கோட்பாட்டின் அடிப்படையில் நான்கு (04) குறிப்பிட்ட உத்திகளை உருவாக்குக.

(08 புள்ளிகள்)

11. i. வகுப்பறை அமைப்பில் ஆரோக்கியமான சகாக்களின் தொடர்பு பிள்ளைகளின் சமூக வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கிறது என்பதை இரண்டு (02) உதாரணங்கள் மூலம் விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. ஆசிரியராக, பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகள் எதிர்கொள்ளும் மாணவரை ஆதரிக்க குழு நடவடிக்கைகளை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதை விபரிக்குக. குறைந்தது மூன்று (03) உத்திகளைக் குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

iii. "சில நேரங்களில் பிள்ளைகள் தங்கள் நடத்தை வேறுபாடுகள் காரணமாக சகாக்களால் நிராகரிக்கப்படுகிறார்கள்." சகபாடி நிராகரிப்பைத் தடுக்கவும், உட்படுத்தல் (Inclusion) ஊக்குவிக்கவும் உதவும் நான்கு (04) ஆசிரியர் தலையீடுகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

12. i. குடும்பம் தொடர்பான பிரச்சினைகளால் ஏற்படும் மனவெழுச்சி மன அழுத்தத்தை சமாளிக்க பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் குழந்தைகளுக்கு உதவக்கூடிய இரண்டு (02) வழிகளை விபரிக்குக.

(05 புள்ளிகள்)

ii. ஆசிரியர்கள் பெரும்பாலும் பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகள் ஆரம்ப அறிகுறிகளைக் கவனிக்கிறார்கள். இது போன்ற நான்கு (04) அறிகுறிகளை அடையாளம் கண்டு சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. இது போன்ற நான்கு (04) சேவைகளையும், பிள்ளைகளிடையே காணப்படும் பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

13. சித்ரா எழுதுவதில் சிரமப்படும் 7 வயது மாணவி கணிதத்தில் சிறந்து விளங்குகிறாள், ஆனால் தமிழ் எழுத்துக்கள் மற்றும் எழுத்துப்பிழைகளை எழுதுவதில் அவள் தொடர்ந்து தவறுகளைச் செய்கிறாள். அவளுடைய ஆசிரியர் அவளை சோம்பேறியாகவும் கவனக்குறைவாகவும் கருதுகிறார். ஆனால் சித்ராவின் சிரமங்கள் டிஸ்லெக்ஸியா (Dyslexia) போன்ற கற்றல் குறைபாட்டைக் குறிக்கின்றன.

i. சித்ரா அனுபவிக்கும் கற்றல் சிரமங்களை விளக்கி, இவை ஏன் டிஸ்லெக்ஸியாவின் (Dyslexia) அறிகுறிகளாக இருக்கலாம் என விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. சோம்பல் மற்றும் கற்றல் குறைபாட்டை ஒரு ஆசிரியர் எவ்வாறு வேறுபடுத்திப் பார்க்க முடியும் மூன்று (03) உதாரணங்கள் மூலம் விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. சித்ரா வகுப்பறையில் தனது எழுத்துத் திறனை மேம்படுத்த உதவும் மூன்று (03) கற்பித்தல் உத்திகளைப் பட்டியலிட்டு விளக்குக.

(08 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -



119